**பாடம் - 4** **الدرس الرابع**

**வேட்டையாடுதல்** **الصيد**

தேவைக்காக மிருகங்களை வேட்டையாடுவது கூடும். வீண், விளையாட்டுக்காக வேட்டையாடுவது மக்ரூஹ் - வெறுக்கத்தக்கதாகும். வேட்டையாடி பிடிபட்ட பிராணிக்கு இரு நிலைகள் உள்ளன.

1. உயிருடன் பெற்றுக் கொள்வது, அப்போது அதை அறுப்பது அவசியமாகும்.
2. இறந்த நிலையிலோ அல்லது நிலையற்ற உயிருடனோ பெற்றுக் கொள்ளப்பட்டால் அவை ஹலாலாகும்.

அறுக்கக்கூடியவனுக்குரிய நிபந்தனைகள் தான் வேட்டையாடக்கூடியவனுக்கும். அவை வருமாறு:

1. புத்தி சீர்நிலையில் உள்ள முஸ்லிமாக அல்லது வேதக்காரனாக இருக்க வேண்டும். பைத்தியக்காரன், போதையுள்ளவன் அறுத்தவற்றையும் நெருப்பு வணங்கி, சிலை வணங்கி, கப்ருவணங்கி போன்ற காஃபிர்கள் அறுத்தவற்றையும் முஸ்லிம் உண்பது கூடாது.
2. அறுக்கக்கூடிய ஆயுதம் இரத்தத்தை ஓட்டக்கூடிய வகையில் கூர்மையானதாக இருப்பது நிபந்தனையாகும். எலும்பு, நகத்தைக் கொண்டு அறுக்கக் கூடாது. வேட்டைப் பிராணியை ஆயுதத்தின் அழுத்தத்தினால் காயப்படுத்தாமல் அதன் கூர்மை கொண்டு காயப்படுத்தியிருக்க வேண்டும்.
3. வேட்டையாடக்கூடிய நாய் மற்றும் பறவைகள் பயிற்று விக்கப்பட்டவையாக இருந்தால் அவை கொன்றவற்றை சாப்பிடுவது கூடும். பயிற்றுவிக்கப்பட்ட வேட்டைப் பிராணி என்பது அதைப் ‘போ’ என அனுப்பி வைத்தால் போகும், ‘வா’ என அழைத்தால் திரும்பி வரும். மேலும் அது ஒரு வேட்டையைப் பிடித்தால் தனது எஜமானனிடம் வரும் வரை எஜமானனுக்காகவே பிடித்து வைத்துக்கொள்ளும். தனக்காக பிடித்துக் கொள்ளாது.
4. வேட்டையாடுபவன் வேட்டைப் பிராணியை நோக்கி கருவியை எறிய வேண்டும். அவனது கையிலிருந்து ஆயுதம் கீழே விழுந்து ஒரு பிராணியைக் கொன்று விட்டால் அது அவனுக்கு ஹலாலாகாது. ஏனெனில் அதை வேட்டையாடுவது அவனது நோக்கமாக இருக்கவில்லை. ஒரு நாய் தானாகவே சென்று ஒரு பிராணியைக் கொன்றுவிட்டால் அதன் எஜமானன் அதை அனுப்பாததாலும் அவன் வேட்டையை நாடாததாலும் அவனுக்கு அது ஹலாலாகாது.
5. ஒருவன் ஒரு பிராணியை எறிந்து அது வேறு பிராணியையோ அல்லது பிராணிகளின் ஒரு கூட்டத்தையோ கொன்று விட்டால் அவை அனைத்தும் அவனுக்கு ஹலாலாகிவிடும்.
6. அம்பை அல்லது காயப்படுத்தக்கூடியதை அனுப்பும்போது பிஸ்மில்லாஹ் என்று கூறவேண்டும். அத்துடன் அல்லாஹு அக்பர் என சேர்த்துக் கூறுவது சுன்னத்தாகும்.

குறிப்பு: நபி(ஸல்)அவர்கள் அனுமதி வழங்காத காரியங் களுக்காக நாய் வளர்ப்பது ஹராமாகும். அவர்கள் அனுமதி வழங்கியவை வேட்டை, விவசாயப் பாதுகாப்பு மற்றும் கால்நடைகளைப் பாதுகாத்தல் ஆகிய மூன்று காரியங்கள் ஆகும்.